பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 06 | திங்கட்கிழமை | 21.08.2023 | அதிர்வு 20

## நல்லூர் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் 02▶

# ரணிலையும் அவர் அரசையும் ஓட ஓட விரட்டியடிப்போம்!

## ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார சூளுரை



**கொழும்பு, ஓகஸ்ட் 21**

**“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும், அவர் தலைமையிலான மொட்டு அரசையும் ஓட ஓட விரட்டியடிப்போம். அந்த நாள் நெருங்கி வருகின்றது. மக்கள் படை எம் பக்கமே நிற்கின்றது.”**

**- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.** 02▶

# ஜனாதிபதி இன்று சிங்கப்பூர் பயணம்!

இரண்டு நாள்கள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தூதுகுழுவினர் இன்று சிங்கப்பூருக்கு பயணமாகவுள்ளனர்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது தேசிய பாதுகாப்புத் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட 02▶



# இராஜாங்க அமைச்சர்கள் நால்வர் பதில் அமைச்சர்களாக நியமனம்!

இரண்டு நாள்கள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி உள்ளிட்ட தூதுகுழுவினர் இன்று சிங்கப்பூருக்கு பயணமாகவுள்ள நிலையில், நான்கு இராஜாங்க அமைச்சர்கள் பதில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் பதில் பாதுகாப்பு அமைச்சராகவும், நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பதில் நிதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், தொழிநுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பதில் தொழிநுட்ப அமைச்சராகவும், இராஜாங்க சமூக வலுவூட்டல் அமைச்சர் அனுபா பெஸ்குவால் பதில் சமூக வலுவூட்டல் அமைச்சராகவும் செயற்படவுள்ளனர்.

# திருப்பி அடியுங்கள்!

## பெருந்தோட்ட மக்களுக்கு மனோ அறிவுரை



அரசும் சட்டமும் எங்களுக்குப் பாதுகாப்பு தராவிட்டால் எமது குடும்பத்தையும், சொத்தையும் பாதுகாக்க நாம் திருப்பி அடிக்க முடியும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு மத்திய 02▶

## இரகசியம்



இலங்கையில் வருமான வரி செலுத்துவோர் பற்றிய ஒரு விவரத் தகவலை இன்று வாசகர்களுடன் பகிர விரும்புகிறேன்.

இலங்கையில் ஒரேயொருவர் மட்டுமே வருடாந்தம் 30 கோடி ரூபாவுக்கு மேல் வருமான வரி 02▶

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

செலுத்துகின்றார்.

வருடாந்தம் 5 கோடி ரூபாவுக்கும் 10 கோடி ரூபாவுக்கும் இடையில் வரி செலுத்துபவர்கள் ஆக மூன்றே மூன்று பேர். இரண்டரை கோடி முதல் 5 கோடி ரூபா வரை வரி செலுத்துவோர் 16 பேர்.

50 லட்சம் ரூபா முதல் ஒரு கோடி ரூபா வரை வருடாந்தம் வரி செலுத்துபவர்கள் 137 பேர். இருபது லட்சம் முதல் 50 லட்சம் ரூபாய் வரை செலுத் துவோர் 508 பேர். 804 பேர் பத்து லட்சம் முதல் இருபது லட்சம் ரூபாவும், ஐயாயிரத்து 473 பேர் 5 லட்சம் முதல் 10 லட்சம் ரூபாவும் வருடாந்தம் வரி செலுத்துகின்றனர்.

வரி செலுத்துவோர் தொடர்பில் 5 லட்சம் பேரின் கோவைகள் வருமான வரித் திணைக்களத்தில் பதியப்பட்டுள்ளன. ஆனால் அவர்களில் ஆக 31 ஆயிரம் பேரே ஏதேனும் வருமான வரியை வருடாந்தம் செலுத்துகின்றனர்.

இலங்கையில் ஒரு லட்சத்து ஐயாயிரம் கம்பெனிகள் உள்ளன. அவற்றில் 328 பதிவு செய்யப்பட்ட கம்பனிகளே நாட்டின் முழு கம்பெனிகளின் மொத்த வருமான வரியில் 82 வீதத்தைச் செலுத்துகின்றனவாம். அப்படியானால் எஞ்சியவை 'மன்னார் அண்ட் கம்பனி'களோ தெரியவில்லை.

மருத்துவர்கள் போன்ற விசேட திறமை நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு இந்த வரி விதிப்புக் கொள்கை தான் காரணம் என்கிறார்கள்.

ஆனால் புள்ளிவிவரங்கள் அப்படி இருக்கின்றமை போலத் தெரியவில்லையே... எங்கேயோ இடிக்கின்றது போல உங்களுக்குத் தோன்றவில்லையா?

## ஜனாதிபதி இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

ஆலோசகரும் ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க உள்ளிட்டோரும் இணைந்துகொள்கின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த சுற்றுப்பயணத்தின் போது, சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலீமா யெகோப்பைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளமையோடு, சிங்கப்பூர் பிரதமர் லீ சியேன் லுங், சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர் நெங் ஹெங் ஹென், நிலைபேறு மற்றும் சுற்றாடல் அமைச்சர் கிரேஸ் பூ ஹாய் இயன் ஆகியோருடன் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

பெரிஸ் உடன்படிக்கையின் 6ஆவது உறுப்புரை, சர்வதேச கார்பன் வர்த்தகத்தின் கீழ் பசுமை வீட்டு வாயு வெளியேற்றத்தை மட்டுப்படுத்தும் நோக்கத்துடன் குறைந்த செலவில் ஒத்துழைப்புக்களை பரிமாறிக்கொள்ள இரு நாடுகளுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சிங்கப்பூர் பிரதமருக்கும் இடையிலான கலந்துரையாடலின் பின்னர் பரிஸ் உடன்படிக்கைக்கு அமைவாக கார்பன் சீர்ப்படுத்தல் தொடர்பில் இலங்கை மற்றும் சிங்கப்பூர் அரசாங்கங்களுக்கு இடையிலான ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

## திருப்பி அடியுங்கள்!...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கல்லூரியில் நேற்று நடைபெற்ற "மலையகத் தமிழ் மக்களுடைய 200 வருட வரலாறு" நூல் அறிமுக விழாவில் மாத்தளை மாவட்ட ரத்வத்தை தோட்டத்தில் தமிழ் தொழிலாளர்களின் சொத்துக்கள் சேதப்படுத்தியமை தொடர்பில் கருத்துக் கூறிய மனோ கணேசன் அது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"அதுதான் உங்களுக்குப் புரிகின்ற பாஷை என்றால் அதைப் பேச நாம் தயார் என்பதைப் பொறுப்புடன் கூறி வைக்க விரும்புகின்றேன்.

நீதியரசர் இளஞ்செழியன் தனது தீர்ப்பு ஒன்றில், தற்காப்புக்காகத் திருப்பி அடிக்கும் உரிமையின் சட்ட வரம்பு பற்றி கூறியுள்ளார். அதையே நான் இங்கு பிரதிபலிக்கின்றேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மைப் பேச்சுக்கு அழைக்கின்றார். ஆனால், நாம் பலமுறை சொல்லியும், அவரது அரசு, எமது மக்களுக்கு எதிராகப் பெருந்தோட்ட நிர்வாகங்கள் நடத்தும் அராஜகங்களைக் கண்டும் காணாமல் இருக்கின்றது.

ஆகவே, பெருந்தோட்டங்களில் எமது மக்களின் இயல்பு வாழ்கைக்கு உத்தரவாதம் தராவிட்டால், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஜனாதிபதியுடன் பேச்சில் கலந்து கொள்ளும் முடிவை மறுபரிசீலனை செய்யும்." - என்றார்.

## நல்லூர் கந்தனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

இன்று காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மகோற்சவத்துக்கு முதல் நாளான நேற்று கொடிச்சீலை கையளிக்கும் பாரம்பரிய நிகழ்வு இடம்பெற்றது.

கொடிச்சீலை வழங்கும் செங்குந்த மரபினரின் இல்லத்தில் கொடிச்சீலைக்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று பாரம்பரிய முறைப்படி கல்வியங்காடு வேல் மடம் ஆலயத்துக்கு கொடிச்சீலை எடுத்து வரப்பட்டது.

அங்கு இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளின் பின்னர் கொடிச்சீலை சிறிய ரதத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு எடுத்து செல்லப்பட்டு ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

இன்று காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள மஹோற்சவம் எதிர்வரும் செப்டெம்பர் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள தீர்த்தத் திருவிழா வரையான 25 நாள்களுக்குத் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

மகோற்சவ காலத்தில் ஆகஸ்ட் 30 ஆம் திகதி, புதன்கிழமை மாலை 4:45 மணிக்கு மஞ்சத் திருவிழாவும், செப்டெம்பர் 04ஆம் திங்கட்கிழமை திகதி இரவு 7:00 மணிக்கு அருணகிரிநாதர் உற்சவமும், 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4:45 மணிக்குக் கார்த்திகை உற்சவமும், 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, காலை 06:45 மணிக்கு சூர்யோற்சவமும், 09 ஆம் திகதி சனிக்கிழமை காலை 06:45 மணிக்கு சந்தான கோபாலர் உற்சவமும், அன்று மாலை மாலை 4:45 மணிக்குக் கைலாச வாகனமும் இடம்பெறவுள்ளன.

செப்டெம்பர் 10 திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 06:45 மணிக்கு கஜாவல்லி - மஹாவல்லி உற்சவமும், மாலை 4:45 மணிக்கு வேல் விமானமும், 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 06:45 மணிக்கு மாம்பழத் திருவிழா எனப்படும் தெண்டாயுதபாணி உற்சவமும், மாலை 4:45 மணிக்கு ஒருமுகத் திருவிழாவும், 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4:45 மணிக்கு சப்பறத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

செப்டெம்பர் 13 திகதி, புதன்கிழமை காலை தேர்த் திருவிழா இடம்பெறவுள்ளது. அன்று காலை 06:15 மணிக்கு வசந்த மண்டப் பூஜை இடம்பெற்று, அதனைத் தொடர்ந்து ஆறுமுகப்பெருமான் சித்திரத் தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார்.

செப்டெம்பர் 14 திகதி, வியாழக்கிழமை காலை 06:15 மணிக்குத் தீர்தோற்சவமும், 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மாலை 4:45 மணிக்கு பூங்காவன உற்சவமும் 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4:45 மணிக்கு வைரவர் சாந்தியும் நடைபெறவுள்ளன.

மகோற்சவகால ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் மாநகர சபை, நல்லூர் பிரதேச செயலகம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உற்சவ காலத்தையொட்டி நேற்று முதல் எதிர்வரும் செப்டெம்பர் 16 ஆம் திகதி வரை ஆலயத்தை சூழவுள்ள யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, அரசடி வீதி, கோவில் வீதி, செட்டித்தெரு வீதி ஆகிய வீதிகளின் ஊடான வாகனப் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதுடன், போக்குவரத்துக்கான மாற்று ஏற்பாடுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

உற்சவ காலத்தில் ஆலயச் சுற்றாடலில் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து கண்காணிப்புக்குப் பொலீஸாரின் உதவி பெறப்பட்டுள்ளதுடன், சுகாதாரம், நீர் விநியோகம், சுத்திகரிப்புப் பணிகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் மேற்கொள்ளப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரணிலையும் அவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"தானும் அரசும் கவிழப் போகின்றமையை ரணில் விக்கிரமசிங்க உணர்ந்து விட்டார். அதனால்தான் ஆட்சிக் கவிழ்ப்புக்கு இடமில்லை என்று அவர் உளறுகின்றார்.

மக்கள் ஆணை இல்லாத ஒருவர் எப்படி ஜனாதிபதி பதவியில் இருக்க முடியும்? மக்கள் ஆணையை இழந்த அரசு எப்படி ஆட்சியைத் தொடர முடியும்? இலங்கையில் விசித்திரமான ஜனாதிபதி தலைமையிலான அரசு பதவியில் இருக்கின்றது.

மக்களை வதைக்கும் இந்த அரசை விரட்டியடிக்க மக்கள் அனைவரும் ஒன்றிணைய ஆரம்பித்துள்ளார்கள். ரணில் - மொட்டு அரசை ஓட ஓட விரட்டியடிப்போம்." - என்றார் அவர்

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சமஷ்டியின் நியாயம்

தமிழ்த் தேசிய அரசியலில், அண்மைக் காலமாக முக்கியமான ஒரு விடயம் உணர்வுபூர்வமான அம்சமாகப் பேசப்படுகின்றது. அது 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் அல்லது அதன் முழுமையான நடைமுறையாக்கம் என்பதாகும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் சமஷ்டி என்ற இரண்டு தளங்களுக்கு இடையில் தெளிவான - வரையறையான - கோடு இழுக்கப்பட்டு, இந்த இரண்டும் தமிழ் தேசிய அரசியல் மட்டத்தின் பிரதான பேசுபொருள்களாகி இருக்கின்றன

இந்த வரையறைப் பிரிப்புக்கு ஒரு பக்கத்தில் - சமஷ்டி மட்டுமே என்ற பக்கத்தில் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போன்ற தரப்புகள் தெளிவான நிலை எடுத்து நிற்கின்றன.

சமஷ்டி பற்றி வாய்ப்பந்தல் பேச்சு பேசினாலும், அரசமைப்பின் 13 வது திருத்தம் என்ற பக்கத்தில் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசியக் கட்சி, விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி போன்றவை நிலையெடுத்துள்ளமை தெளிவு.

பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி சமஷ்டியை வலியுறுத்தினாலும் - அதை விட்டுக் கொடுக்காமல் - அதற்கு கீழ் சமரசம் செய்யாமல் - 13 ஐயும் சமஷ்டியையும் பிரிக்கும் கோர்ட்டில், இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் இல்லாமல் நிற்கின்றது.

13 ஆம் திருத்த பக்கத்தில் இன்னொரு தரப்பு உண்டு. ஒரு வகையில் அது பிரதான தரப்பும் கூட. அது - இந்தியா.

இது, இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை என்றாலும், அதைத் தீர்ப்பதற்கான எத்தனம் என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச ஒப்பந்தமான இலங்கை - இந்திய உடன்பாட்டில் தமிழர் நலன்களை வலியுறுத்தி ஒப்பமிட்ட தரப்பு இந்தியாவே. ஆகவே அதுவும் பங்காளித் தரப்புப் போன்றதே.

அது, இன்றும் 13 பற்றியே வலியுறுத்துகின்றது. பேசுகின்றது. பழைய பல்லவியைக் கீறல் விழுந்த றெக்கோர்ட் மாதிரித் திரும்பத் திரும்பப் பாடுகின்றது. அந்த ஒப்பந்தம் செய்து 35 ஆண்டுகள் கடந்த பின்னரும், இந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தியாக - 'இந்திய உபகண்டம்' என்று தன்னைப் பிரபலாபப்படுத்திக் கொள்ளும் - அந்தத் தரப்பினால் இப்போதும் 13 ஆம் திருத்தத்தை பற்றி வெறுமனே வாய்ப் பேச்சுப் பேசவும், அறிக்கைகளில் வலியுறுத்தவுமே இயலுகின்றது. அதற்கு மேல் அத்தரப்புக்கு இயலுமை ஏதும் உண்டா என்பதும் இப்போது சந்தேகத்துக்கிடமாகித்தான் வருகின்றது.

13ஐ வலியுறுத்தும் இந்தியா, அதற்கு ஜால்ரா போடும் தமிழ் கட்சிகள் ஆகியவற்றை விட்டு விட்டுப் பார்த்தால், மற்றத் தரப்புகள் வற்புறுத்துவது சமஷ்டியைத்தான்.

சமஷ்டி என்றால் என்ன? பகிரப்பட்ட அதிகாரம் மீளப் பறிக்கப்பட முடியாத அதிகாரப் பகிர்வுதான் சமஷ்டி.

இந்தியா மூலம் கிட்டிய 13 ஆவது அரசமைப்பு திருத்தம் கடந்த 35 ஆண்டுகளாக முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்தியாவின் கண் முன்னேயே பகிரப்பட்டவை ஒவ்வொன்றாக பிடுங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றமை கண்கூடு.

இலங்கை விடயத்தில் இந்தியாவின் இத்தகைய இயலாமை, சமஷ்டி கேட்கும் தரப்புக்களின் கோரிக்கையை நியாயப்படுத்தி நிற்கின்றமையை யாரும் மறுத்து விட முடியாது.

# நாடு திரும்பினர் பிரதமர் குழுவினர்

சீனாவிற்கு 4 நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான குழுவினர் நாடு திரும்பியுள்ளனர்.

சைனா ஈஸ்டர்ன் விமான நிறுவனத்திற்கு சொந்தமான விமானத்தில் இவர்கள் நேற்றிரவு நாடு திரும்பியுள்ளனர்.

சீன வர்த்தக அமைச்சு மற்றும் யுனான் மாகாண அரசு இணைந்து நடத்தும் 7ஆவது சீன - தெற்காசிய எக்ஸ்போ கண்காட்சி மற்றும் 27 ஆவது சீனா குன்மிங் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கண்காட்சி கலந்து கொள்வதற்காக பிரதமர் சீனாவிற்கு சென்றிருந்தார்.

இதில் 60 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிகரிக்கின்றது வெங்காய விலை



இந்திய அரசாங்கம் வெங்காயத்துக்கு 40 சதவீத ஏற்றுமதி வரியை விதித்ததன் காரணமாகவே இலங்கையிலும் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதாக இலங்கை இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, ஒரு கிலோ வெங்காயத்தின் சில்லறை விலை 200 முதல் 220 ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வரியை டிசம்பர் 31ஆம் திகதி வரை விதிப்பதற்கு இந்திய அரசு தற்போது முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுபானசாலைக்கு முல்லையில் எதிர்ப்பு

முல்லைத்தீவு, உணாப்பிலவு பகுதியில் அமைக்கப்பட்ட மதுபானசாலைக்கு பொதுமக்கள், பொது அமைப்புக்கள் இணைந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டம் உணாப்பிலவு பகுதியில் புதிதாக சில்லறை மதுபானசாலை நிலையமொன்று இம்மாதம் 15ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளது. இதற்கு அந்த கிராம மக்கள், பொது அமைப்புக்கள் இணைந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

அத்தோடு, அவர்கள் மதுபானசாலையை அகற்றுமாறு கோரி பிரதேச செயலாளருக்கு கடிதம் ஒன்றினை கடந்த 16ஆம் திகதி புதன்கிழமை வழங்கியுள்ளார்கள்.

கடிதம் வழங்கியும் இதுவரை மதுபானசாலையை அகற்ற எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்த கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மதுபானசாலை அமைந்துள்ள இடத்துக்கு 100 மீற்றர் தூரத்துக்குட்பட்ட பகுதியில் பாடசாலைகள், மத ஸ்தலங்கள் இருக்கக்கூடாது என்பது விதிமுறையாக உள்ளதன் அடிப்படையில், இது குறித்து தங்களிடம் அபிப்பிராயம் கேட்கப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்த கிராமத்தில் பாடசாலை அமைந்திருப்பதனால், பாடசாலை மாணவர்கள் போதைக்கு அடிமையாவது, பாடசாலையிலிருந்து இடைவிலகுவது போன்ற நிலைமைகள் உருவாகும் என அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கைக்குப் பயணிகள் கப்பல் சேவைக்கு தயாராகின்றது நாகை

## தமிழக அமைச்சர் தகவல்

இலங்கைக்குப் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு இந்திய மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது என தமிழகத்தின் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் அமைச்சர் ஏ.வி.வேலு தெரிவித்துள்ளார்.

குஜராத்தில் உள்ள கெவாடியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு நாகை துறைமுகம் தயாராகி வருகிறது என அமைச்சர் ஏ.வி.வேலு தெரிவித்துள்ளார்.

அத்துடன், இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் ஆகிய இடங்களுக்கு இடையே கப்பல் சேவையை புதுப்பிக்க ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தமிழகத்தின் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் அமைச்சர் ஏ.வி.வேலு தெரிவித்துள்ளார்.



# திருமலைத் துறைமுகத்தை பார்வையிடுவதற்கு அனுமதி!

திருகோணமலைத் துறைமுகம் மற்றும் நிலாவெளி புறாத்தீவை பொதுமக்கள் மீண்டும் பார்வையிடுவதற்கான திட்டத்தை கடற்படை ஆரம்பித்துள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், பாடசாலை மாணவர்கள், கடற்படையினர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனக் கடற்படையின் மத்திய பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, திருகோணமலை துறைமுகம் மற்றும் நிலாவெளி புறா தீவினை பார்வையிடுவதற்கான சகல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளமையுடன், குறைந்த கட்டணங்களுடன் தரமான சேவை வழங்கப்படும் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.



Singhams Media
அலை ஓசை
துல்லியமான ஒலிநயத்துடன் உங்கள் நிறுவனங்களின் பெயர்களை ஒலிபரப்பு செய்து கொள்ள நாடுங்கள்.
திருநெல்வேலி பகுதியில்.
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 076 610 5467, 077 124 2732




# Pearl Island Inn

## Hotel & Restaurant

Dine - in | Take Away | Soft Drinks

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com




# வடக்கு - கிழக்கு - மலையகத் தமிழர்களை ஒன்றிணைத்த பெருந்தலைவர் பிரபாகரன்!

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. புகழாரம்



(விஜயரத்தினம் சரவணன்)

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ் மக்களிடையிலும், தமிழ் மக்கள் பிரதிநிதிகளிடையிலும் இருக்கின்ற ஒற்றுமையின்மை காரணமாகவே இந்த நாட்டிலுள்ள ஆட்சியாளர்கள் தமிழர்களை இலகுவாக தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்வாறு வழிநடத்துகின்றனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் அந்த அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் வடக்கு, கிழக்கு, மலையைகம் என்ற ஒன்றிணைந்த ஒரு கட்டமைப்பை உருவாக்கி, நாம் ஒரே தமிழர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்று அடையாளப்படுத்தினார் எனவும் சாள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற "மலையகத் தமிழ் மக்களுடைய 200வருட வரலாறு" எனும் வரலாற்று நூல் அறிமுக விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

மலையக மக்களுடைய 200வருட வாழ்க்கை வரலாற்றை ஏன் எழுத வேண்டும் என்பதைப்பற்றி நாம் சற்றுச் சிந்திக்கவேண்டும்.

ஒரு புத்தகம் எழுதுவதாகவிருந்தால் அதற்கு ஒரு காரணம் வேண்டும்.

இந்தப் புத்தகத்தினை இரா.சுப்பிரமணியம் பல வேலைப் பழுக்களுக்கு மத்தியில் ஏன் எழுதினார் என்பதைச் சிந்திக்கவேண்டும்.

ஏன் எனில் கடந்த 200வருடங்களாக மலையக மக்கள் பட்ட துன்ப துயரங்களை ஒரு பதிவாக, இன்னும் பல்லாயிரம் வருடங்களுக்குப் பிற்பாடு தாம் பட்ட துன்பதுயரங்களை தமது சமுதாயம் திரும்பிப் பார்க்கவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இந்தப் புத்தகம் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

இதனை வெறுமனே புத்தக வெளியிட்டு விழாவாக மாத்திரம் கருதமுடியாது.

புத்தகங்களை இங்கிருந்து வாங்கிச் சென்று, சில நாளகளுக்குப் பிற்பாடு அந்தப் புத்தகம் எங்கே என்று தெரியாத ஒரு சமூகக் கலாச்சார சூழலில்தான் நாம் தற்போது வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

புத்தகங்கள் படிக்கின்ற ஆற்றல் குறைந்து சமூக வலைத் தளங்களில் எமது பார்வைகள் அதிகமாகியிருக்கின்றன.

ஆனால் புத்தகங்களில் இருக்கின்ற அந்த வரலாறுகளை நாங்கள் நிச்சயமாகப் படிக்கவேண்டும்.

எங்களுடைய வரலாறுகள் என்னவென்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

எங்களுடைய முன்னோர்கள் எங்களுக்காகப் பட்ட துன்பங்களை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அவ்வாறு அறிந்துகொண்டால்தான் நாம் சரியாக வாழமுடியும்.

எங்களுக்காக எங்களுடைய முன்னோர்கள் பட்ட துயரங்களை அறிந்தால் நாம் சரியான சிந்தனையுடன், நாம் நல்ல வழிகளில் வாழ்வதற்கு எங்கள் முன்னோர்கள் செய்த தியாகங்கள், துன்பங்கள் எமக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும்.

அந்தவகையில் இந்த இரா.சுப்பிரமணியத்தை நான் வாழ்த்தி நிற்கின்றேன்.

ஒருவரலாற்றை பதிவிட்டு அனைத்து மக்களுக்கும் சென்று சேரக் கூடிய வகையில் இந்தப் புத்தகத்தினை அவர் அமைத்திருக்கின்றார்.

கடந்த 2009ஆம் ஆண்டிற்கு முன்பு நாம் இந்த மண்ணில் சுதந்திரமாக எமது கலாச்சார அடிப்படையில், மத அடிப்படையில், இன அடிப்படையில், மொழி அடிப்படையில் ஒரு கௌரவமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்தோம்.

ஆனால் தற்போது பெரும்பான்மை இனத்தவர்கள் எங்களை வழிநடாத்துகின்ற, எம்மை துச்சமாக நினைக்கின்ற அளவிற்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ் மக்களிடையிலும், தமிழ் மக்கள் பிரதிநிதிகளிடையிலும் இருக்கின்ற ஒற்றுமையின்மை காரணமாகவே இந்த நாட்டிலுள்ள ஆட்சியாளர்கள் எம்மை இலகுவாக தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்வாறு வழிநடாத்துகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வடக்கு, கிழக்கு, மலையைகம் என்ற ஒன்றிணைந்த ஒரு கட்டமைப்பினை உருவாகியிருந்தார். அத்தோடு மலையகத்தில் பொங்குதமிழ் நிகழ்வொன்று அப்போது மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு, கிழக்கு மற்றும், மலையகத்தில் பொங்கு தமிழ் மேற்கொள்வதனூடாக நாம் மூன்று பகுதிளிலும் ஒரே தமிழர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்று அன்று பிரபாகரன் அடையாளப் படுத்தினார்.

ஆனால் தற்போது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் ஆகிய மூன்றுபகுதிகளையும் உள்ளடக்கிய கட்டமைப்பு இல்லாமல் , வடக்கிற்கு வேறாக, கிழக்கிற்கு வேறாக, மலையகத்திற்கு வேறாக தமிழ் மக்கள் பிரிந்து நிற்கின்றனர்.

இது எமது முன்னோர்களுக்கு நாம் செய்கின்ற துரோகமாகவே பார்க்கிறேன்.

முடிந்தவரையில் நாம் அனைவரும் ஒற்றுமையாகப் பயணிப்போம் - என்றார்.

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகும் அரச மருத்துவர்கள்

வைத்தியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக வைத்தியர்களை அச்சுறுத்தவே சுகாதார அமைச்சு முயற்சித்து வருவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, இப்பிரச்சினைகளுக்கு சுகாதார அமைச்சு உடனடி தீர்வினை வழங்காவிடின் எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஹரித அலுத்கே கூறியுள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால், வேறு வகையான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு வைத்தியர்கள் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# வவுனியாவில் மதுபானச்சாலையில் தாக்கப்பட்டவர் நேற்று உயிரிழப்பு






வவுனியாவில் உள்ள மதுபானசாலை ஒன்றில் குடும்பஸ்தர் ஒருவர் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் படுகாய மடைந்து வவுனியா பொது வைத்தியசா லையில் சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனப் பொலி ஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவு னியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள மது பானசாலைக்கு சென்றிருந்த இளம் குடும்பஸ்தரை அங்கு மது அருந்திக் கொண்டிருந்த இருவர் அழைத்து அடித் துள்ளனர். அவரைத் தாக்கி நிலத்தில் தூக்கி போட்டுள்ளனர். இதனால் இளம் குடும்பஸ்தர் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து, அங்கு நின்றவர்கள் அவரது வீட்டிற்கு தகவலை தெரியப்படுத் தியமையையடுத்து, படுகாயமடைந்த குடும்பஸ்தரின் தாயார் அங்கு வந்து, அவரை வவுனியா வைத்தியசாலைக் குக் கொண்டு சென்றுள்ளார். அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப் பட்ட போதும் குறித்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந் தார்.

இச்சம்பவத்தில், வவுனியா, மகா றம்பைக்குளம் காந்தி வீதியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரதீபன்(தீபன்) என்பவரே உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸாரின் துணையுடன் வவுனியா பொலிசார் விசாரணைகளை முன்னெடுத் தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடை யவர் எனக் கருதப்படும் பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய பிர தான சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு நேற்றுப் பிற்பகல் சென்ற பதில் நீதவான் தி.திருஅருள் தாக்குதல் இடம்பெற்ற இடத் தில் இருந்த சான்று பொருள்களைப் பார் வையிட்டமையுடன், சாட்சியங்களிடமும் விசாரணை நடத்தினார். அத்துடன் இறந்த இளம் குடும்பஸ்தரின் சடலத்தை உடற் கூற்று பரிசோதனைக்குட்படுத்த உத்தர விட்டமையுடன், சந்தேக நபர்களை உடன் கைது செய்யுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இது தொடர்பில் வவுனியா பொலி ஸார் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர்.

# மட்டக்களப்பு மண்முனை மேற்கை வாட்டி வதைக்கும் வறட்சி நிலைமை

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் கடும் வறட்சி நிலையுடனான காலநிலை காரணமாக மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நெடியமடு, பாவக்கொடிசேனை உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் குடி தண்ணீரின்றி தாம் தினமும் சிரமப்படுகின்றனர் எனவும் குடி தண் ணீருக்காக மிக நீண்ட தூரம் பயணித்து குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசமாகவும் கடந்தகால யுத்த பாதிப் புக்களை எதிர்கொண்ட பகுதியாகவும் உள்ள இப்பிரதேசத்தின் மக்கள் தினமும் அதிகாலை வேளையில் குடி தண்ணீர் எடுப்பதற்காக மிக நீண்ட தூரம் கால்நடை யாகச் செல்லும்போது காட்டு யானை களின் தாக்குதல்களுக்கு உட்படுகின் றனர். தொடர்ந்து அச்சத்துடன் பய ணித்து குடி தண்ணீரைப் பெறவேண் டிய துர்ப்பாக்கிய நிலமைக்குத் தாங்கள் தள்ளப்பட்டுள்ளனர் எனவும், இதனால் தமது பிள்ளைகள் உரிய நேரத்துக்கு பாட சாலைக்கு செல்வதில் சிரமம் உள்ளதாக வும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர்.

தொடரும் வறட்சி நிலைமை காரண



மாக மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவில் 2000க்கு மேற்பட்ட குடும்பங் கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களின் பிரதான தொழிலாகக் காணப்படும் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு என்பனவும் இதனால் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளன. கால்நடைகளுக்குரிய பச்சைப் புற்கள் தற்போது கருகிய நிலை யில் காணப்படுவதாகவும் கால்நடைகள் குடி தண்ணீரின்றி அலைந்து திரிகின் றன எனவும் தெரிவிக்கும் அவர்கள் ஏனையோருக்கு வழங்கப்படுவது போன்று குழாய் மூலம் குடி தண்ணீரைப் பெற்றுத்தர துறைசார்ந்தவர்கள் உடன் முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போது அப்பகுதியில் மேற்கொள் ளப்பட்ட விவசாய நடவடிக்கைகள் வறட்சி காரணமாக முற்றாக பாதிக்கப் பட்டுள்ளது. பயன்தரும் மரங்களும் பாதிக் கப்பட்டுள்ளன. சிறுவர்கள் குளிப்ப தற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் பனைச்சேனை, கரவெட்டி. நெடியமடு, தாண்டியடி, காந்திநகர், உன்னிச்சை, உள்ளிட்ட பல கிராம மக்கள் இந்த வறட்சி யினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள னர்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத் தின் பிரதான குடி தண்ணீர் வழங்கல் திட்டம் அம்மக்கள் வாழ்கின்ற, வவுண தீவில் காணப்படுகின்ற போதிலும், அதனை அண்டிய பிரதேசங்களில் உள்ள கிராம மக்களுக்கு அத்திட்டத்தினூ டாக விநியோகிக்கப்படும் குடி தண்ணீர் கிடைக்காமல் அலையும்போது அவர்கள் காட்டு யானை தாக்கத்திற்கு உள்ளாவதும் தொடர் கதையாகவே இருந்து வருவது வேதனைக்குரிய விடயமாகும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குடி தண் ணீர் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சைவப் பாரம்பரியத்தின் கோட்டையாக நல்லூர்

## இன்று கொடியேற்றத் திருவிழா



வடக்கு மக்களின் வாழ்வியல் கோலத்தை கந்தபுராணக் கலாசாரம் என்பார்கள். அத்துணை இறுக்கமான முருக வழிபாடு அவர்களுடையது. அவர்களின் பண்பாட்டுப் பண்டிகையான நல்லூர் முருகன் மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

### நல்லூர் கந்தசுவாமி கோவிலின் தோற்றம்

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வேர்கள் 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. அசல் கந்தசுவாமி கோயில் கி.பி 948 இல் நிறுவப்பட்டது. இருப்பினும், 15 ஆம் நூற்றாண்டில், கோட்டே அரசரான ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின் போது, கோயில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு உட்பட்டது. கோட்டே இராச்சியத்தின் சார்பாக யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட சபுமல் குமாரையா மூன்றாவது நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தைக் கட்டுவதில் முக்கியப் பங்காற்றினார்.

யாழ்ப்பாண மன்னர்களின் தலைநகராக விளங்கிய நல்லூர், கோவிலுக்கு அருகாமையில் இருந்த அரச மாளிகையுடன் பெரும் முக்கியத்துவம் பெற்றது. இந்த நகரம் இந்து மரபுகளின்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நுழைவாயிலிலும் கோயில்களுடன் நான்கு நுழைவாயில்களைக் கொண்டுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, கோயில் மற்றும் பிற கட்டமைப்புகளின் அசல் இடங்கள் பின்னர் போர்த்துகீசியர்களால் கட்டப்பட்ட தேவாலயங்களால் ஆக்கிரமிக்கப்பட்டன.

நல்லூர் நகரம் அரணாக இருந்தது. கோவில் உயர்ந்த மதில் சுவர்களைக் கொண்ட தற்காப்புக் கோட்டையாக இருந்தது. கி.பி 1624 இல் போர்த்துக்கேயர் படையெடுப்பு மற்றும் மூன்றாவது கோவில் அழிக்கப்பட்ட போதிலும், நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வளமான வரலாறு மற்றும் கலாச்சார முக்கியத்துவம் தொடர்ந்து நீடித்தது.

### தற்போதைய கோவில்

இன்று இருக்கும் நான்காவது மற்றும் தற்போதைய கோவில், டச்சு காலனித்துவ காலத்தில் கி.பி 1734 இல் கட்டப்பட்டது. "டான் ஜ/வான்" ரகுநாத மாபாண முதலியார், டச்சு கச்சேரியில் ஒரு ஷ்ராஃப். "குறுக்கல் வளவு" என்று அழைக்கப்படும் இடத்தில் கோயிலைக் கட்டினார். ஆரம்பத்தில், கோயில் செங்கற்கள், கற்கள் மற்றும் ஓலைக் கூரையுடன் கட்டப்பட்டது. பல நூற்றாண்டுகளாக, ரகுநாத மாபாண முதலியாரின் வழித்தோன்றல்கள் கோயிலின் பாதுகாவலர்களாகப் பணியாற்றி, அதன் தற்போதைய மகிமையை கணிசமாகக் கூட்டி மேம்படுத்தி வருகின்றனர்.

1890 ஆம் ஆண்டு ஏழாவது பாதுகாவலரான ஆறுமுக மாபாண முதலியார் பதவியேற்ற பிறகு நல்லூர் கோயிலின் "பொற்காலம்" தொடங்கியது. அவரது நிர்வாகத்தின் கீழ், கோயில் 1899 இல் முதல் மணி கோபுரம் கட்டுவது உட்பட பல மேம்பாடுகளைக் கண்டது. பிரதான கருவறையைப் பயன்படுத்தி புதுப்பிக்கப்பட்டது. 1902 இல் கிரானைட், மற்றும் 1909 ஆம் ஆண்டில் முதல் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டது. அடுத்தடுத்த பாதுகாவலர்கள் புதுப்பிக்கும் பணியைத் தொடர்ந்தனர். இறுதியில் கோவிலை நாட்டின் மிக முக்கியமான இந்து கோவில் வளாகமாக மாற்றியது. இந்த கோவிலில் இப்போது நான்கு கோபுரங்கள், ஆறு மணி கோபுரங்கள் மற்றும் கோட்டை சுவர்கள் உள்ளன, இது நல்லூரில் உள்ள ஒரு கம்பீரமான கோட்டையை ஒத்திருக்கிறது.

### கட்டடக்கலை மற்றும் அம்சங்கள்

கோயிலின் கட்டடக்கலை திராவிட பாணியின் பிரமிக்க வைக்கிறது. பிரதான நுழைவாயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது மற்றும் ஐந்து அடுக்கு கோபுரம் அல்லது கோபுரத்திற்கு இட்டுச் செல்கிறது, சிக்கலான செதுக்கப்பட்ட மற்றும் பிரம்மாண்டத்தை வெளிப்படுத்துகிறது. கோவில் வளாகத்திற்குள், விநாயகர், சந்தன கோபாலர், கஜவல்லி மகாவல்லி, வைரவர் மற்றும் சூரியன் மற்றும் வைரவர் ஆகியோருக்கு அர்ப்பணிக்கப்பட்ட பல்வேறு சன்னதிகளை பக்தர்கள் பார்வையிடலாம். கூடுதலாக, கோயிலின் தெற்குப் பகுதியில் ஒரு புனித குளம் மற்றும் தண்டாயுதபாணியின் சன்னதி உள்ளது. அதே நேரத்தில் வடக்குப் பகுதியில் அமைதியான "பூந்தோட்டம்" அல்லது தெய்வீக தோட்டம் உள்ளது.

### சமூக முக்கியத்துவம்

நல்லூர் கந்தசுவாமி கோவில் இலங்கைத் தமிழ் சமூகத்திற்கு மிகப் பெரிய சமூக முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. இது இலங்கையின் வடக்குப் பகுதியில் தமிழர் அடையாளச் சின்னமாக விளங்குகிறது. கோவில் நிர்வாகம், அதன் நேரம் தவறாமை, ஒழுங்கு மற்றும் நேர்த்திக்கு பெயர் பெற்றது, மற்ற சைவ ஃ கௌமாரம் கோவில்களுக்கு முன்மாதிரியாக அமைகிறது. கோவிலின் மீது தங்களின் ஆழ்ந்த பயபக்தியையும், அபிமானத்தையும் வெளிப்படுத்தும் வகையில், மதச் சடங்குகளின்பால் பக்தர்கள் ஈர்க்கப்படுகிறார்கள்.

# நாட்டில் தொடரும் வறட்சி தேயிலை துறையும் வீழ்ச்சி

நாட்டில் நிலவும் வறட்சியான வானிலை காரணமாக தேயிலை துறையும் வீழ்ச்சிய டைந்துள்ளது.

இதனால் தமக்கான வருமானம் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது என தேயிலை செய்கையாளர்கள் தெரிவித் துள்ளனர்.

வறட்சி காரணமாக, தேயிலை அறு வடை 18 வீதத்தினால் வீழ்ச்சியடைந் துள்ளது என சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தலை வர் தம்மிக மஹீபால தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், வறட்சியான வானி லையுடன் தேயிலை உற்பத்தியை பாதுகாப் பதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

# கஞ்சா கலந்த மாவா பாக்குடன் யாழ்ப்பாணத்தில் இருவர் கைது

கசிப்பு மற்றும் கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இளைஞர் கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டை பகுதி யில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட் டனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து 1,500 மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் 21 கிராம் 450 மில்லி கிராம் கஞ்சா கலந்த மாவா போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து, சந்தேக நபர்கள் இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# தோட்டத்தில் அடாவடியில் ஈடுபட்ட உதவி முகாமையாளர் பணி நீக்கம்

## மக்களிடம் மன்னிப்புக் கோரிய நிர்வாகம் மாத்தளையில் களமிறங்கி ஜீவன் அதிரடி



அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலையீட்டால் மாத்தளை மாவட்டத்தில் எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்துக் குட்பட்ட ரத்வத்தை தோட்டப் பகுதியில் அடாவடியில் ஈடுபட்ட தோட்ட உதவி முகா மையாளரைப் பணி நீக்கம் செய்வதற்குத் தோட்ட நிர்வாகம் இணங்கியுள்ளது.

அத்துடன், குறித்த உதவி முகாமையாள ரால் அடித்து நொறுக்கப்பட்ட வீட்டுக்குப் பதிலாகப் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்குப் புதிய வீடொன்றை நிர்மாணித்துக் கொடுக் கவும் நிர்வாகம் இணங்கியுள்ளது.

மாத்தளை, ரத்வத்தை தோட்டப் பகுதி யில் தோட்டத் தொழிலாளர் ஒருவரின் தற்காலிக குடியிருப்பை உதவி முகா மையாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் அடித்து நொறுக்கும் காட்சி மலையக மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் இவ்விவகாரம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிடுவதற்காகவும், நிர்வாகத்துடன் பேச்சு நடத்துவதற்காகவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செய லாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நேற்று மாத்தளைக்குச் சென்றிருந்தார்.

இ.தொ.காவின் தவிசாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, புதிய கிராமங்கள் அபிவி ருத்தி அதிகார சபையின் பிராந்திய பணிப் பாளர் ரூபதர்ஷன், தேசிய நீர் வழங் கல் வடிகாலமைப்புச் சபையின் பிரதித் தலைவர் சஞ்ஜீவ விஜயகோன், எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தின் தலைவர் உள்ளிட்ட பிரமுகர்களும் அமைச்சருடன் சென்றிருந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய தோட்ட உதவி முகாமையாளரைச் சம்பவ இடத் துக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் அழைத்த நிலையில், அதற்கு நிர்வா கத்தினர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் தோட்ட நிர்வாகத்துடன் ஜீவன் தொண்டமான் கடும் சொற்போரில் ஈடுபட்டார். இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

அதன் பின்னர் சம்பவத்துடன் தொடர்புடைய உதவி முகாமையாள ரைப் பணி நீக்கம் செய்வதற்கு நிர்வாகம் இணங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட குடும் பத்துக்குப் புதிய வீட்டை நிர்மாணிக்கவும் உடன்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தோட்ட மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோருவதாகவும் நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 120 விசேட வைத்திய நிபுணர்கள் கறுப்புப் பட்டியலில் இணைப்பு!

நாட்டை விட்டு வெளியேறிய 120 விசேட வைத்திய நிபுணர்கள் கறுப் புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள னர்.

வெளிநாடுகளுக்குச் சென்று பணிக் குத் திரும்பாத வைத்திய நிபுணர்களே இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள னர்.

2022 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி முதல் இந்த வருடத்தின் ஓகஸ்ட் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 363 வைத்தியர்கள் வெளிநாட்டுப் பயிற் சிக்காகச் சென்றுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களில், 120 மருத்துவர்கள் மீண்டும் நாடு திரும்பவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதற்கமைய, நாட்டின் 29 மயக் கவியல் நிபுணர்களில் 12 பேரும் நாடு திரும்பவில்லை.

இதேவேளை, கறுப்புப் பட்டியலில் உள்ள மருத்துவர்கள் நாடு திரும்ப முடியும் என்ற போதிலும் அவர்கள் சேவையில் ஈடுபடுவதானால், பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் மேன்முறை யீடு செய்ய வேண்டும் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

### 25ம் திகதி இலங்கைக்கு வரும்

# சொப்பன சுந்தரி

### குஷியாகக் காத்திருக்கும் இளைஞர்கள்

கரகாட்டக்காரன் காலம் முதலாய் அனேகமானோரால் தேடப்பட்டுக் கொண்டிருக்கும் 'சொப்பன சுந்தரி' யை மாதவனும் அவரது சினிமா நண்பர்களும் சுமார் ஆறு வருடங்களாக மறைத்து வைத்திருந்திருக்கிறார்கள். இதற்கு மேலும் ஒளித்து வைத்திருப்பது நல்லதல்ல என்று நினைத்தவர்கள், எதிர் வரும் ஓகஸ்ட் 25ஆம் திகதி 'சொப்பன சுந்தரி'யை ரிலீஸ் செய்யப் போவதாக அறிவித்ததில் இருந்து இளைஞர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு உருவாகி யுள்ளது.

**யார் இந்தக் குழுவினர்? ஏன் இவர்கள் ஆறு வருடங்களாகச் 'சொப்பன சுந்தரி'யை மறைத்து வைத்திருந்தார்கள்?**

கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு முன்னிருந்தே பல குறும்படங்கள் மூலமாக இலங்கைத் திரைத் துறையினரின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்த்தவர் இயக்குனர் மாதவன் மகேஸ்வரன். 'அப்பால்', 'என்னாச்சு?' போன்ற குறும்படங்கள் மூலம் நன்கு அறியப்பட்ட மாதவன், வெவ்வேறு விருது விழாக் களில் பல விருதுகளைத் தனது குறும்படங்கள் மூலம்வென்றுள்ளார். இந்த இளம் இயக்குனர் தன் சினிமா நண்பர்களின் கூட்டணியில் இயக்கியி ருக்கும் முதலாவது முழுநீளத் திரைப்படமே 'சொப்பன சுந்தரி'.

2017ம் ஆண்டில் படமாக்கப்பட்டு, சுமார் ஆறு வருடங்களாக பின்களத் தயாரிப்புப் பணி களில் இருந்த 'சொப்பன சுந்தரி' பல சவால் களைத் தாண்டி இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி திரைக்கு வந்து ரசிகர்களைக் குஷிப்படுத்தப் போகிறது.

இலங்கையில் தமிழில் உருவாக்கப்படும் முழுநீளத் திரைப்படங்கள் பல இப்போது வெளி வந்த வண்ணம் இருக்கின்ற இந்த சூழலில் ரசிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நோக்கத்தோடு தயாரிக்கப் பட்டிருக்கும் 'சொப்பன சுந்தரி'யும் திரைக்கு வருவது, இலங்கையின் தமிழ் சினிமாத்துறை மும்முரமாக இயங்கத் தொடங்கி விட்டது என்பதற்கான அடையாளமே!.


மாதவன் ஜோயல்

மாதவனின் ஆஸ்தான கதாசிரியரும் நடிகருமாகிய ஜோயல், 'சொப்பன சுந்தரி'க்கான கதை, திரைக்கதையை எழுதி, ஒரு பிரதான கதாபாத்திரத்திலும் நடித்திருக்கின்றார்.கொழும்பு நகரைக் கதைக்களமாக கொண்டு உருவாகி யிருக்கும் இத்திரைப்படத்தில், இலங்கையின் புகழ் பூத்த கதாநாயகி நிரஞ்சனி சண்முகராஜா 'சுந்தரி' கதாபாத்திரத்திலும், அவருடன் இணைந்து பேர்ழிஜா, கஜானன், நரேஷ், தனுஷ் செல்வ நாதன், வருண் துஷ்யந்தன், ரவி, ஜெனோஷன் ஆகியோரும் முக்கிய பாத்திரங்களில் நடித்திரு க்கிறார்கள். இயக்குனர் மாதவனும் ஓர் பிரதான பாத்திரமேற்று நடித்திருக்கிறார்.

ஒரு பெரும் சிக்கலில் சிக்கிக் கொள்ளும் மூன்று நண்பர்களும், அவர்களுக்கு விளையும் வில்லங்கங்களும் என்று விறுவிறுப்பான இரண் டரை மணிநேர முழுநீள நகைச்சுவைத் திரில்லர் திரப்படபடமாக 'சொப்பன சுந்தரி' தயாராகி இருக்கிறது.

எல் எக்ஸ்ரீமோ, என்னாச்சு? என்று குறும்படங்கள் மூலம் தங்களின் ஒத்திகைகளைப் பார்த்து வைத்திருந்த மாதவனும் நண்பர்களும் அடுத்து ஒரு முழுநீளத் திரைப்படத்தை எடுக்கலாம் என்று 2017ம் ஆண்டு முடிவு செய்தார்கள். அந்த முடிவின் விளைவாக காதல், கொமெடி, பாடல்கள், ஆக்ஷன், ட்விஸ்ட் என முற்றுமுழுதான கொமெர் ஷல் பாணியில் இந்த 'சொப்பன சுந்தரி'யை உருவாக்கியிருக்கிறார்கள்.




**சொப்பன சுந்தரி திரையிடப்படும் திரையரங்கு விபரங்கள் இதோ:**

- SAVOY 3D - WELLAWATE
- CONCORD - DEHIWALA
- REGAL - DEMATAGODA
- PVR - COLOMBO (FROM SEPT 01)
- REGAL - JAFFNA
- NELSON - TRINCOMALEE
- GK CINEMAX - KALMUNAI
- AMUTHA CINEMA - VAVUNIYA

### இரண்டரை மணிநேர முழுநீள நகைச்சுவைத் திரில்லர்

கிட்டத்தட்ட ஆறு மாதங்களாகத் தயாரிப் பாளர்களின் முதலீட்டிற்காக காத்திருந்த 'சொப்பன சுந்தரி', பின்னர் மாதவன், கஜானன் மற்றும் ஜோயலின் சொந்தத் தயாரிப்பில் 2017ம் ஆண்டின் பிற்பகுதியில் படமாக்கப்பட்டது. சமல் விக்ரமசிங்க வின் ஒளிப்பதிவிலும், இயக்குனர் மாதவனின் படத் தொகுப்பிலும் உருவாகி இருக்கும் காட்சிகளுக்கு இசையமைத்திருக்கிறார் பிரபல இசையமைப்பாளர் ஜீவானந்தன் ராம். ஜீவாவின் மெட்டுகளுக்கு வருண் துஷ்யந்தன், ராகுல் ராஜ் மற்றும் சங்கர் வரிகள் எழுதியுள்ளனர்.


சமல் விக்ரமசிங்க

இத்திரைப்படத்தின் படப்பிடிப்பிற்குப் பின்ன ரானதொழில்நுட்பப்பணிகளையும்செய்துகொண்டு, அதே கலைஞர்களின் கூட்டணியில், 2020ஆம் ஆண்டில் **'SUNDAY'** எனும் இணையத் தொடரையும் Dialog நிறுவனத்தின் VIU செயலிக்காக மாதவன் இயக்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத் தொடரில் பேர்ழிஜா முதன்மைக் கதாபாத்திரத்தி லும், இலங்கை சினிமாத் துறையில் பலரது அன்பையும் வென்ற கலைஞன் அமரர் தர்ஷன் தர்மராஜ் அவர்கள் ஒரு பிரதான பாத்திரத்திலும் நடித்திருந்தனர்.

இலங்கையில் இன்னும் ஒரு முற்று முழுதான தொழிற்துறையாக மாற்றம் பெறாத தமிழ் திரைப்படத் துறையில் ஒரு முழுநீளத் திரைப் படைத்தைத் தயாரித்து வெளியிடுவது என்பது, அதுவும் தயாரிப்பாளர்கள் யாருமே இல்லாமல் இம்மாபெரும் இலக்கை ஆறு வருடங்களாகப் போராடி அடைவது என்பது உண்மையிலேயே ஒரு உன்னதமான சாதனைதான். இக்கூற்றை வழி மொழிவதைப்போல அமைந்திருக்கிறது, ஜுலை மாத ஆரம்பத்தில் இணையத்தில் வெளியான 'சொப்பன சுந்தரி' ட்ரெய்லர் இளைஞர்கள் மத்தியில் பெற்று வரும் அமோகமான வரவேற்பு.


சொப்பன சுந்தரி படக் குழுவில் சிலர்

ஒரு நண்பர் பட்டாளத்தின் உழைப்பிலும், பெரும் பொருட்செலவிலும் உருவாகி, ஆறு வருட விடாமுயற்சியால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி திரைக்கு வரும் 'சொப்பன சுந்தரி', பார்ப்பவர்களை சிரித்து மகிழ வைக்கப் போவதும், இளைஞர்களால் மகிழ்ந்து கொண்டாடப்படப் போவது நிச்சயம்.

# அ.தி.மு.கவை அழிக்க நினைக்காமல் தி.மு.கவை காப்பாற்றிக் கொள்ளுங்கள்!

## - மதுரை மாநாட்டில் இ.பி.எஸ். எச்சரிக்கை



அ.தி.மு.கவை அழிக்க வேண்டும் என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம் எனவும் உங்கள் கட்சியை காப்பாற்றிக் கொள்ளுங்கள் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மதுரையில் நடந்த அ.தி.மு.க. மாநாட்டில் அந்த கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளராக பழனிசாமி பொறுப்பேற்ற பின்னர் அந்த கட்சியின் முதல் மாநில மாநாடு மதுரை அருகே வலையங்குளத்தில் நேற்று இடம்பெற்றது. மக்களவைத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு மதுரையில் நடக்கும் இந்த மாநாட்டுக்கு 'அ.தி.மு.க. வீர வரலாற்று பொன்விழா எழுச்சி மாநாடு' எனப் பெயரிட்டு இருந்தனர்.

தமிழகம் முழுவதும் இருந்து இந்த மாநாட்டில் லட்சக்கணக்கான நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர். மாநாட்டு நுழைவு வாயிலில் 51 அடி கொடி கம்பத்தில் பொதுச்செயலாளர் பழனிசாமி அ.தி.மு.க. கொடியேற்றி வைத்து மாநாட்டை தொடங்கி வைத்தார்.

பொதுச் செயலாளர் பழனிசாமி மாநாட்டில் உரையாற்றுகையில்,

அ.தி.மு.க. 51 ஆம் ஆண்டில் அடி யெடுத்து வைத்துள்ளது. 31 ஆண்டு காலம் தமிழகத்தை அ.தி.மு.க. ஆட்சி செய்துள்ள பெரிய கட்சியாக திகழ்கிறது. அ.தி.மு.க. ஆட்சியால்தான் தமிழகம் ஏற்றம் பெற்றுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி முதல்வர் ஸ்டாலின் இராமேஸ்வரத்துக்கு சென்று கச்சதீவை மீட்போம் என்று பச்சை பொய் பேசினார். கச்சதீவு தி.மு.க. ஆட்சியில்தான் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டது. தட்டிக் கேட்கவில்லை. போராட்டம் நடத்தவில்லை. இன்று முதல்வர் முக.ஸ்டாலின் வீர வசனம் பேசுகிறார். கச்சதீவு பறிப்போனதால் இராமேஸ்வரம் மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும்போது ஓய்வெடுக்கவும், வலைகளை காய வைப்பதற்கும் கச்சதீவை பயன்படுத்தினார். கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண் டும் என ஜெயலலிதா பலமுறை வலியுறுத் தினார். உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து கச்சதீவை மீட்க போராடினார். உச்சநீதிமன்றம் மத்திய, மாநில அரசுகள் பதில் அளிக்க வேண்டும் என உத்தரவிட்டது. ஆனால், அப்போது ஆட்சியில் இருந்த கருணாநிதி பதில் மனு தாக்கல் செய்யவில்லை. மத்திய அரசு, கச்சதீவை மீட்க முடியாது, ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியாது என பதில் மனு தாக்கல் செய்தது. அதே பதில் மனுவை கருணாநிதி உச்சநீதிமன்றத்தில் போட்டார்.

மீண்டும் ஜெயலலிதா அ.தி.மு.க. ஆட்சியை கொண்டு வந்தபிறகு சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்துள் ளார். கச்சதீவை மீட்க போராடுகிற கட்சியாக அ.தி.மு.க. உள்ளது. 13 ஆண்டு காலம் மத்திய அமைச்சரவையில் தி.மு.க. அமைச்சர்கள் இருந்தனர். அப்போது கச்சதீவை மீட்க முயற்சி எடுக்கவில்லை. இப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவரது ஆட்சிக்கு ஆபத்து வந்துவிட்டது என்று பதறிப்போய் அச்சத்தின் அடிப்படையில்தான் மீனவர்கள் மத்தியில் கவர்ச்சிகரமாக பேசி கச்சதீவை மீட்போம் என பொய் பேசுகிறார்.

அ.தி.மு.கவை அழிக்க வேண்டும் என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம். உங்கள் கட்சியை காப்பாற்றிக் கொள் ளுங்கள். அ.தி.மு.க. நிர்வாகிகள் மீது பொய் வழக்கு பொடுகிறீர்கள்என்று தெரிவித்துள்ளார்.

# வெங்காயத்துக்கு 40 சதவீதம் வரை ஏற்றுமதி வரியை விதிக்க தீர்மானம்!



இந்தியாவில் அண்மைக்காலமாக வெங்காயத்தின் விலை அதிகரித் துள்ள நிலையில், தற்பொழுது வெங்கா யத்துக்கு 40 சதவீதம் ஏற்றுமதி வரியை விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முக்கிய சந்தைகளில் வெங்காயத் தின் சராசரி மொத்த விற்பனை விலை ஜுலை முதல் ஒகஸ்ட் வரையான காலப்பகுதியில் சுமார் 20 சதவீதம் வரை உயர்ந்துள்ளதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி உடன் அமுலாகும் வகையில் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதி வரை இந்த வரியை விதிக்க இந்தியா தீர்மானித்துள்ளது.

இந்த தீர்மானம் இந்தியாவிடமிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்யும் இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், மலேசியா மற்றும் ஐக்கிய அரபு இராச் சியம் போன்ற நாடுகளை பாதிக்கும் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித் துள்ளன.

# நிலவில் மோதியது லூனா -25 விண்கலம்!

## - ரஷ்யாவின் அவசர முயற்சி தோல்வி



ரஷ்யாவின் லூனா - 25 விண்கலம் நிலவில் மோதியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலவின் தென்துருவத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக ரஷ்யா, லூனா-25 என்ற விண்கலத்தை கடந்த 10 ஆம் திகதி விண்ணில் செலுத்தியது.

இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலத்துக்கு போட்டியாக ரஷ்ய விண்கலம் அனுப்பப்பட்டது.

சந்திரயான்-3 விண்கலம் 23 ஆம் திகதி நிலவில் தரை இறங்க திட்டமிட்டுள்ள நிலையில் அதற்கு முன்பாக 21 ஆம் திகதி லூனா-25 விண்கலத்தை நிலவில் தரையிறக்க ரஷ்ய விஞ்ஞானிகள் முடிவு செய்தனர்.

சுமார் 47 ஆண்டுகளுக்கு பிறகு நிலவுக்கு ரஷ்யா அனுப்பிய லூனா-25 விண்கலம் வெற்றிகரமாக நிலவின் சுற்றுவட்டப் பாதைக்குள் நுழைந்தது.

இதையடுத்து அதன் சுற்றுப் பாதையை குறைக்கும் பணிகள் நடைபெற்றது. அதன்படி லூனா-25 விண் கலத்தின் உயர குறைப்புகளை விஞ்ஞானிகள் செய்து வந்தனர்.

இந்த நிலையில், லூனா-25 விண்கலத்தில் திடீரென்று தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. நிலவில் தலையிறக்குவதற்கு முந்தைய சுற்றுவட்டப் பாதையில் விண்கலத்தை செலுத்துவதில் சிக்கல் ஏற்பட்டது.

இதனால் இறுதிக்கட்ட சுற்றுப் பாதையை குறைப்பதில் பின்னடைவு ஏற்பட்டதால் விண்கலத்தை திட்டமிட்டபடி அடுத்த சுற்றுப்பாதைக்கு அனுப்ப முடியவில்லை.

இந்த நிலையில், ரஷ்யாவின் லூனா 25 விண்கலம் நிலவில் மோதியுள்ளது என ரஷ்யா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் லூனா - 25 விண்கலத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்பொழுது, குறித்த விண்கலம் நிலவில் மோதியுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

லூனா-25 விண்கலத்துடன் மீண்டும் தொடர்பை ஏற்படுத்த ரஷ்ய விஞ்ஞானிகள் முயற்சித்த நிலையில் இந்த தோல்வி ஏற்பட்டுள்ளது.

# மழை வெள்ளத்தால் உயிர்சேதம் ஏற்படலாம்: அமெரிக்காவில் மக்களுக்கு கடும் எச்சரிக்கை!

மெக்சிக்கோவின் பசுபிக் கடற்கரையை நோக்கி நகரும் சூறாவளி வலுவிழந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், அதனால் ஏற்பட்டு வரும் பெருவெள்ளம் உயிர்சேதத்தை விளைவிக்கலாம் என அமெரிக்க வானிலை ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

ஹிலரி எனப்படும் இந்த சூறாவளி காரணமாக மணிக்கு 175 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசிய நிலையில், தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் கலிபோனியா தீபகற்பகம் மற்றும் அமெரிக்காவின் தென் மேற்கு பகுதிகளில் காலநிலை சீர்கேடு தொடர்கிறது என அறிவிக்கப் பட்டுள்ளது.

80 வருடங்களுக்கு பின்னர் இந்த வகையிலான சூறாவளி குறிப்பிட்ட



பிரதேசங்களை தாக்கி வருகிறது என காலநிலைய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். சூறாவளி நகர்ந்து செல்லும் பகுதிகளில் வாழும் மக்கள் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை அவதானிக்கும்படி ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

# சுவிஸில் தமிழீழக் கிண்ணத் தாச்சி: குமரநகர் ஒன்றிய அணி வெற்றி!



(த.சுபேசன்)

சுவிஸ் தமிழர் இல்லம் அண்மையில் அனைத்துலக ரீதியாக நடத்திய தமிழீழக் கிண்ணத்துக்கான தாச்சி இறுதிப் போட்டியில் குமரநகர் ஒன்றிய வெளிநாட்டு அணியினர் வெற்றி பெற்று தமிழீழக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

சுவிஸ் தமிழர் இல்லம் 20 ஆவது தடவையாக நடத்திய தமிழீழ கிண்ணத்துக்கான தாச்சிச் சுற்றின் இறுதிப்போட்டி சுவிஸ் நாட்டில் இடம்பெற்றிருந்தது.

அங்குள்ள கைதடி நண்பர்கள் அணியை எதிர்த்து குமரநகர் ஒன்றிய வெளிநாட்டு அணியினர் மோதினர்.

இதில் கோடீஸ் தலைமையிலான குமரநகர் ஒன்றிய அணியினர் 1:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றிருந்தனர்.

இறுதிப்போட்டியின் சிறந்த வீரராக குமரநகர் அணியைச் சேர்ந்த புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வாழும் வேலாயுதம் லட்சுமணன் தெரிவு செய்யப்பட்டார்.

# மட்டக்களப்பில் மோட்டர் சைக்கிள் திருடனை அடையாளம் காட்டுக!

## பொது மக்களிடம் பொலிஸார் கோரிக்கை



(க.சரவணன் )

மட்டக்களப்பு நகர் திருகோணமலை வீதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகாமையிலுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டர் சைக்கிள் ஒன்று திருட்டுப் போயுள்ளது.

அதனைத் திருடிச் சென்றவர் சிசிரி கமராவில் பதிவாகியுள்ளார். இவர் தொடர்பாக அடையாளம் தெரிந்தவர்கள் அறிவிக்குமாறு பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பொலிசார் கோரியுள்ளனர்.


இன்று ஞாயிற்றுக்கிழமை (20) மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இந்த மாதம் 2 ஆம் திகதி குறித்த வீதியில் 'பல்சர்' ரக மோட்டர் சைக்கிளை நிறுத்திவிட்டு ஹோட்டலுக்கு சென்று உணவு சாப்பிட்டுவிட்டு வெளியே வந்து பார்த்த போது அங்கி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் திருட்டுப் போயிருந்தது.

இது தொடர்பில் பொலிஸரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில் பொலிஸார் மேற்கொண்டுவந்த விசாரணையில் சிசிரி கமராவில் குறித்த திருட்டு பதிவாகியுள்ளது. இதனையடுத்து சம்பந்தப்பட்ட நபர் தொடர்பாக அடையாளம் தெரிந்தவர்கள் பொலிஸாருக்கு தெரிவிக்குமாறு கோரியுள்ளனர்.

# காணாமல் போயுள்ள 78 வயது மூதாட்டி



(க.சரவணன்)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள கருவப்பங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 78 வயதுடைய மூதாட்டி ஒருவர் காணாமல் போயுள்ளார்.

இவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் உடனடியாகத் தெரிவிக்குமாறு பொது மக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டு கருவப்பங்கேணி அம்பிறோஸ் வீதியைச் சேர்ந்த 78 வயதுடைய நடராசா கண்மணியம்மா என்பவர் கடந்த யூன் 24 ஆம் திகதி வீட்டில்இருந்துவெளியேறியநிலையில் காணாமல் போயுள்ளார். இவரை உறவினர்கள் கடந்த இரண்டு மாதங்களாக தேடி வருகின்றனர்.

இவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தால் உடனடியாக மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்துக்கு 065-2224422 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வீரச்சோலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்







(நூருல் ஹுதா உமர்)

வீரச்சோலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 85 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை, பாதணி என்பன வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் அந்தோனி சுதர்சன் தலைமையில் இன்று பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இணைந்த கரங்கள் அமைப்பு உறவுகளின் நிதிப் பங்களிப்பு மற்றும் மில்ரோகித் ராஜ்குமாரின் நிதி பங்களிப்புடன் இம் மாணவகளுக்கான கற்றல் உபகரணங்கள், பாதணி மற்றும் புத்தகப்பைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் முன்னாள் அதிபர் இ. தியாநிதி, ராஜ்குமார் ஜெயச்சித்திரா ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இணைந்தகரங்கள்அமைப்பின் இணைப்பாளர்களான காந்தன், சுரேஷ், பாடசாலையின் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு பலப்படுத்தப்பட்ட வீதித் தடைகள்




வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று (21) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிலையில் ஆலய சுற்றுவீதிகளில் வீதித்தடைகள் அமைக்கப்பட்டு போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி இன்று (21) ஆரம்பமாகவுள்ள திருவிழாவை முன்னிட்டு நேற்று (20) காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. செப்டெம்பர் 16 ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப்படும் என்று யாழ். மாநகர சபை அறிவித்துள்ளது.

நல்லூர் ஆலயச் சுற்று வீதிகள் மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ். மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ். நகரை அடைய முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நல்லூர் கந்தசுவாமி ஆலய இரதோற்சவம் மற்றும் சப்பர திருவிழாக்களின்போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் வசிப்பவர்கள் வாகனங்களை உட்கொண்டு செல்ல யாழ். மாநகர சபையினால் நிபந்தனையுடனான விசேட அனுமதி அட்டை வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித் தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியைத் தவிர எந்த காரணம் கொண்டும் வாகனங்கள் உட்செல்ல முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 21.08.2023




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் காரணமாக வெற்றியும் திருப்தியும் அடையலாம்.

இன்று நீங்கள் தன்னிச்சையாகப் பணி புரிந்து பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நேர்மையாக வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். இதனால் மகிழ்ச்சியும் திருப்தியும் நிறைந்திருக்கும்.

இன்று நீங்கள் ஆற்றலுடனும் முழு ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் இயந்திர கதியில் இயங்கும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். இன்றைய சவால்களை சந்திக்க நீங்கள் திட்டமிட்டு செயல் பட வேண்டும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக காணப்படாது.பணிகள் அதிகமாக காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்க்க இயலாது. குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.

பொறுப்புகள் அதிகம் இருப்பதால் தேவையற்ற செலவுகள் காணப்படும். எனவே பணத்தை சாதுரியமாக செலவு செய்ய வேண்டும்,

இன்று தோல் எரிச்சலால் பாதிப்பு காணப்படும். ஆரோக்கியத்தில் கவனம் வைப்பது நல்லது. மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. இன்று சிறிய விஷயங்களுக்குக் கூட எளிதில் உணர்ச்சிவசப்படுவீர்கள். இன்று மனதில் சமநிலையோடு இருங்கள். இனிய இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். நிலுவையில் உள்ள பணிகளை திறமையாகக் கையாண்டு குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் வேறுபாட்டை வெளிப்படுத்துவீர்கள். உரையாடலின் போது கவனம் தேவை.

குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும் காரணத்தால் பணம் செலவாகும்.அதிகரிக்கும் செலவுகளை சுமையாக உணர்வீர்கள்.

இன்று சளி, இருமல் பாதிப்பு காணப்படும். குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது.




இன்று உங்களுக்கு அனுகூலமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று அதிர்ஷ்டம் சிறந்த பலனைத் தரும்.

பணியில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

நீங்களும் உங்கள் துணையும் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதன் மூலம் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலையில் ஸ்திரத்தன்மை காணப்படும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

உங்களின் தேக ஆரோக்கியம் மற்றும் ஆற்றல் காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். நிறைய வாய்ப்புகள் காணப்படும். இன்றைய நாளை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று திருப்தி நிறைந்து காணப்படும்.

நீங்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளைக் கூட எளிதாகச் செய்து உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியாக உணர்வீர்கள். இருவரும் தரமான நேரத்தை இணைந்து செலவழிப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சீராக இருக்கும். குடும்ப நலத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று திடமாகவும் வலிமையாகவும் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் மனதில் அவநம்பிக்கை உணர்வு காணப்படும். இந்தப் போக்கை நீங்கள் சமாளிக்க வேண்டும். கடினமான சூழ்நிலை காரணமாக இன்று சுமையான நாளாக உணர்வீர்கள்.

இன்று பணியிடத்தில் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய கவனமாகப் பணியாற்ற வேண்டும். சிறப்பாக திட்டமிடுவதன் வெற்றி சாத்தியப்படும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் ஆரோக்கியமான உறவுமுறை காணப்படும்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் காரணமாக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று கண் எரிச்சல், முதுகுவலி, மற்றும் கால் வலி போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.




இன்று கடினமான சூழ்நிலை காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளவேண்டும். உங்கள் முயற்சி மற்றும் சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் இலக்குகளை அடையலாம்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். சிறந்த பலனைக் காண நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும்.

தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படலாம். இருவரும் ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்துகொள்ள தவறுவீர்கள்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். எனவே பணத்தை கவனமாக கையாள வேண்டும்.உங்கள் உடன் பிறந்தவர்களின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று வருத்தத்துடன் காணப்படுவீர்கள். உணர்ச்சி வசப்படக் கூடிய நிலை இருப்பதால் அமைதியாக இருப்பது நல்லது. சமாளித்து அமைதியாக இருக்க வேண்டும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

சவாலான பணிகள் காணப்படுவதால் ஓய்வெடுக்க நேரம் காணாது. எனவே திட்டமிட்டு உங்கள் பணிகளை ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் உருவாக இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று குடும்பத் தேவைக்காக பணம் செலவு செய்வீர்கள். பொறுப்புகள் அதிகம் காணப்படுவதால் செலவுகள் அதிகமாக இருக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள் - 21.08.2023




இன்று உங்கள் இலக்குகளை அடைவதில் வெற்றி பெறுவீர்கள். முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும். நீங்கள் இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறனில் திறமையை வெளிபடுத்துவீர்கள். உங்கள் திறமை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள்.

உங்களிடம் இன்று ஆற்றல் நிறைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள்.




இன்று நீங்கள் அதிகம் எதிர்பார்க்க இயலாது. என்றாலும் நம்பிக்கையுடன் செயல்படுங்கள். நேர்மறை கண்ணோட்டம் இன்று மிகவும் அவசியம்.

நீங்கள் வெற்றி பெறுவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும். உங்கள் பணிகளில் தாமதங்களை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் உருவாக இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதி நிலை சிறப்பாக காணப்படாது. இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை சேமிக்க இயலாது.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இன்றைய கடினமான சூழ்நிலையை சமாளிக்க உங்களுக்கு பொறுமை தேவை. எந்தவித இழப்பும் ஏற்படாத வகையில் திட்டமிட வேண்டும். இன்று உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச்சூழல்சுமூகமாக இருக்காது. உங்கள் செயல்களில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானம் மற்றும் யோகா மேற்கொள்வது சிறந்தது.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாளாக இருக்கக் காண்பீர்கள். உங்கள் இலக்குகளை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் நெருங்கியவர்களிடம் நல்ல உறவு முறையைப் பராமரிப்பீர்கள்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று இனிமையான நாளாக உணர்வீர்கள். உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் காரணமாக உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று உங்களிடம் நம்பிக்கை உணர்வு நிறைந்து காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.





